

# போர் வாள்


திருவள்ளுவர் ஆண்டு 1979 புரட்டாசி 17
சென்னை, 2—10—48

வீச்
7






மறுபடியும் உலகமன்றத்தில் போர் வாடை வீசத்தொடங்கிவிட்டது. சாய்ந்து போன ஜெர்மனியின் தலைநகரம் பெர்லின். "அந்தப் பெர்லினை அடியோடு விழுங்கிவிட்டது ரஷ்யா! எனவே இனி அணுக்குண்டு யுத்தம் ஏற்படுமானால் அதற்குப் பொறுப்பாளி ரஷ்யாதான்" என்று முழங்குகிறது பிரிட்டன். இல்லை—நீ தான் பெர்லினைத் திருடிக்கொள்ளப் பார்க்கிறாய் என்கிறது ரஷ்யா. அமெரிக்கக் கழுகும் பிரஞ்சும் புலியும் ஒருபால் வட்டமிடுகின்றன பெர்லினை விழுங்க. பெர்லின் பிரச்சினை இன்று உலக மக்கள் எல்லோருடைய கவனத்தையும் இழுக்கும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுவிட்டது. காரணம், பெர்லின் பிரச்சினையைச் சாக்காகக் கொண்டு அமெரிக்கா—பிரிட்டன்—பிரான்சு அச்சு ரஷ்யாமீதுள்ள தம் பகைமையை அதிகரித்துக் கொண்டு விட்டது. இந்தப் பிளவு எந்த நேரத்திலும் க மாறிவிடக்கூடும், எனவேதான் உலகத்தின் கண்ணோட்டம் பெர்லின் மீதிருக்கிறது. படத்தைப் பாருங்கள் பிரிட்டனும் ரஷ்யாவும் ஒன்றை ஒன்று எவ்வளவு ஆக்ரோஷத் முறைத்துப் பார்க்கின்றன! மேலே வட்டமிடுகின்ற அமெரிக்கக் கழுகுவின் கண்களிலே வஞ்ச நினைப்பையும் கோரத்தையும் யார் அளவிடமுடியும்? வல்லரசுகளுக்கிடையே விட்ட இந்த ஆதிக்கப் போட்டி யுத்தபுரிக்கு நம்மை வெகு வேகமாக இழுத்துச் செல்கிறது ம் பயங்கரமான உண்மையை ரஷ்யக் கரடியின் முறைப்பும், பிரிடிஷ் சிங்கத்தின் சீற்றமும், ப் புலியின் பதுக்கமும், அமெரிக்கக் கழுகின் ஓரவஞ்சப் பார்வையும் நமக்கு நன்கெடுத் ட்டுகின்றன.


ாடு $1\frac{1}{2}$ அணா.

வெளி நாடு 2 அணா.

**சிறு கதை:**

# வீட்டுக்குவீடு அசோகமரம்!

(ஜோ ஆனந்தன், திருச்சி)

**அண்ணா,**

அனேக நாட்களுக்குப் பிறகு என்னிடமிருந்து வரும் இக் கடிதத்தைக்கண்டு திடுக்கிடுவாய். பயலுக்குப் பணம் தீர்ந்துவிட்டதுபோலும் அதுதான் எழுதியிருக்கிறான் என்று எண்ணிக் கொள்வாய். பையன் நன்றாகப் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று கல்லூரிக்கு அனுப்பினேன், ஆனால் அவன் எங்கே முன்னுக்கு வரப் போகிறான், பின்னுக்குப் போகாமலிருந்தால் போதும்' என்று நீ முணுமுணுப்பதும் தெரிகிறது. ஆனால் அண்ணா, உன் தம்பி நிறையப் படித்து ஒரு வக்கீலாகவோ, அல்லது ஒரு டாக்டராகவோ வருவான், அப்போது நிறைய சம்பாதிப்பான். நமக்குப் பேரும் புகழும் நல்ல பெண்ணும் கிடைக்குமென்று நீ நினைக்கிறாய். ஆனால் அதுதானே 'முன்' என்பதின் உன் எல்லை! கேவலம் கல்லூரிப்படிப்பு இல்லாமலேயே அனேகர் முன்னுக்கு வந்துள்ளதை நீ காணவில்லையா? மேலும் கல்லூரிப் படிப்புப் பெற்ற அனேகர் பின்னாலிருப்பதும் உனக்குத் தெரியாதா?

அண்ணா! நல்ல செய்திகள் இருக்கும்போது, மக்கள் விழுந்தடித்துக்கொண்டு வருகிறார்கள் அதைச் சொல்ல. ஆனால் உள்ளத்தை உறுத்தும் செய்திகளைச் சொல்ல, ஓடி வருவதில்லை யாரும். உண்மையைச் சொல்லுவதற்கு முன், சுற்றி வளைத்துக்கொண்டு வரவேண்டியிருக்கிறது!

அண்ணா! உன் மனதைத் திடப்படுத்திக்கொள்! உண்மைகள் எப்போதும் கசப்பான மாத்திரைகள்! அவைகளை மென்று தின்ன விரும்பாவிட்டாலும் விழுங்கவேண்டியிருக்கிறது!

மன்னியிடம் சொல்! 'மாணிக்கம், உனக்குப் பிள்ளை இல்லையே என்ற குறையை இதுவரை தீர்த்து வந்த என் தம்பி எங்கேயோ போகிறானாம்! உன்னையும் என்னையும் அவன் எவ்வளவு நாளைக்குத்தான் திருப்தி படுத்துவான்? சிறகு முளைத்த பறவை சிரித்துக்கொண்டே வெளியேறுவதுபோல எங்கேயோ போகிறானாம், யாரையோ திருப்தி படுத்த'' என்று சொல். ''செலுலாய்டு பொம்மையைக் கேட்ட குழந்தைக்கு மரப்பாச்சியைத் தந்தது போல எனக்கு அவன் கிடைத்தான். இருந்தாலும். அவனை வைத்து இவ்வளவு நாள் நான் விளையாடிக்கொண்டிருந்தேன். இப்போது அவனுக்கு ஒரு மரப்பாச்சி கிடைத்திருக்கும். அதை அவன் பொன்னாலான பொம்மை என்று நினைத்து எங்கேயோ போகிறான், போகட்டும்' என்று அவள் சொல்லுவாள். அண்ணா! உண்மை வெளிவர எவ்வளவு தயங்குகிறது பார்த்தாயா?

கல்லூரிப் படிப்புக்காக இங்கே வந்தபோது, கல்லூரி விடுதியில் இடம் இல்லாமையால் ஊருக்குள்ளே நான் ஒரு வீட்டின்முன் அறையில் தங்கவேண்டி ஏற்பட்டது என்று முன்னமேயே எழுதினேன் அல்லவா! பின்னர் கல்லூரி விடுதியில் இடம் இருப்பது தெரிந்துங்கூட அதை விட்டு நான் அசையவில்லை. ஏன் தெரியுமா? அந்த வீட்டில் ஒரு பெண் இருந்தாள். உண்மையைச் சொல்லப்போனால், அந்த வீட்டில் ஒரு பெண் இருக்கிறாள் என்று தெரிந்து தான் அதிக வாடகை தந்துங்கூட அங்கு குடி புகுந்தேன்.

கோபித்துக் கொள்ளாதே அண்ணா! வெறும் சோறு கிடைத்தால்மட்டும் போதாது, அதோடு ஒரு கறி வேண்டும்—படிக்க வந்தவனுக்கு பொழுது போக்குக்கு ஒரு பொருள் கிடைத்தது என்று எண்ணிதான் அவ்வாறு துணிந்தேன்!

முதலில் அவள் வெறும் ஒரு பெண் என்று தான் எண்ணினேன் — ஆனால் பின்னர்தான் தெரியவந்தது அவள் ஒரு இளம் விதவையென்று!

ஒரு பெண் என்றால் அவளைச் சுற்றி என்னென்ன இருக்கின்றன! அழகு, அன்பு, இசை, இனிமை இவையெல்லாம் ஒவ்வொருத்திக்கும் கைகால் கண் மூக்கு எப்படியோ அப்படித்தான் அவள் கூடவே பிறக்கின்றன என்பது தெரியும். ஆகவேதான் வெறும் புத்தகப் படிப்பினால் புல்லரித்துப்போகும் என் உள்ளத்திற்கு சிறிது உயிர் ஊட்டுவாள்—அன்றாடம் ஒடிந்துபோகும் என் இதய வீணையின் ஒரு கம்பியைச் சரிப்படுத்தி அதில் இசையை மீட்டுவாள் என்று எண்ணினேன்.

மனிதன் ஒரு காரியத்தில் இறங்குவதற்கு முன் சகல பொருள்களும் தனக்குச் சாதகமாகவே இருக்கும் என்றே நம்புகிறான். பின்னால் தனக்குக் கிடைக்கப்போகும், 'எதிர்பாராதவைகளை அவன் முன் கூட்டிக் காண்பதேயில்லை.

நானும் அப்படித்தான். அங்கு வந்த சில நாட்களில் நான் எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டேன் என்று தெரிந்துவிட்டது. வெறும் புத்தகங்களில் வரும் காதற் கற்பனைகளையும் நண்பர்கள் சொல்லும் கட்டுக் கதைகளையும் நம்பியிருந்ததால் என் உள்ளம், எந்தப் பெண்ணும் தன்னையொத்த ஆடவனைக் கண்டால் இணங்காமலிருக்க மாட்டாள் என்ற எண்ணத்திலேயே இறுமாந்திருந்தது.

ஆனால் அந்தப் பெண், என் கண்ணில் படவேயில்லை என்பது மட்டுமில்லை. என் காதுகளில் கூட அவள் படவேயில்லை. உள்ளத்தில் எவ்வளவுக் கெவ்வளவு அவளை உருவேற்றியிருந்தேனோ அவ்வளவுக் கவ்வளவு என் ஐம்புலன்களுக்கும் அப்பாலேயே அவள் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

என் மனத்தை நானே நொந்தேன். 'கண்டதும் கணைவிடுவாள் இல்லையெனினும் இயற்கைக்கு எதிராக இருக்கமாட்டாள் என்று

**போதனையாற் பெண்கள் பொதுவெனல் கனமோ?**

ாண்ணினுயே, இப்போது என்ன சொல்கிருய்! அவள் இருக்கிருளா, இல்லையா என்பதைக்கூட உன் ைல் அறிய முடியவில்லையே! பெண்களெல்லோரும் பேதைகள் ான்ற உன் சொத்தை எண் ாத்தை மாற்றிக்கொள் — உன் ய ஓலையை இனி நீட்டாதே' ான்று இடித்துரைத்தேன். தவிர இத்தகையப் பெண்களுக்கு என் ால் இடைஞ்சல் ஏதும் இருக்கக் டாதே எண்ணினேன்.

ஆனுல், ஒரு நாள் விடியற்காலை ில், என்ன காரணத்தாலோ திடீ ான்று எழுந்த நான் சாளரத் தைத் திறந்ததும்—இருட்டில் சினி ாப்படம் பார்த்துக்கொண்டிருந்து டீரென்று வெளிச்சம் போட்ட ும், சுற்றிப் பார்க்கும்பொழுது ைமை அடுத்த ஆசனத்திலேயே ரு அழகான பெண், அதிலும் ரிந்த பெண் அமர்ந்திருந்தால் ப்படியிருக்கும்!—நான் அவளைக் ண்டேன்.

அவள் வாசலில் கோலமிட்டுக் ாண்டிருந்தாள், முதல் முதல் ான்றுதான் அவளை நான் சரியா ப் பார்த்தேன். அவ்வளவு காலை லேயே அவள் குளித்து முடித்து, ள்ளிக் கோதிய கூந்தலுடன்— க வண்ணம் போன்ற சிவந்த னியைச் சுற்றி கருத்த புடவை ன்—அண்ணு அவள் புடவைக் ் கூந்தலுக்கும் வித்தியாசமே ியவில்லை அண்ணு! கோலமிட்டு ந்ததும் எழுந்து சரேலென்று டிற்குள் புகுந்தபோது—நில ப் பார்த்துக்கொண்டேயிருக்க ரென ஒரு கருத்த மேகத்திற்குள் ந்து கொள்வதுபோல—அப்படி அவள் முகத்தை ஒரு கணம் டுவிட்டேன்!

அண்ணு, பெண்கள் வருந்து தப்பற்றி வர்ணிக்கும்போதெல் அசோக மரத்தடியில் அழுது ந்த சீதையைச் சுட்டிச் சுட்டிக் டும் கம்பரடிப் பொடி ஆழ்வார் க்கு ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சாக மரம் நின்று நிமிர்ந்து வது கண்களில் படுவதே லயே அண்ணு! அதிலும் களே அதற்குத்தண்ணீர் விட்டு ப்பதை மறைக்கப் பார்க்கிருர் ! இதைப் படிக்கும்போது நீ 'ராமா ராமா' என்று காதைப் பொத்திக் கொள்வாய் என்பது தெரியும். உன் காதுகளை எவ்வளவு வேண்டுமானுலும் பொத்திக் கொள். ஆனுல் உன் கண்கள்—அவைகளை அகலமாகத் திறந்து பார்க்கட்டும்!

மன்னி இதைக் கண்டதும் 'கழுத்தை ஒரு வெட்டு வெட்டுவாள் 'மகா கண்டவர்'' என்று! இது அவள் உதட்டுப் பேச்சு. அவள் உள்ளத்தோடு அந்தரங்கமாகப் பேசிப்பார்—எத்தனை நாள் அவள் உன்னையே அசோக மரம் என்று எண்ணியிருந்தாள் என்பதை! உன் பாதத்தில் விழுந்து அழுதது மட்டுமல்ல, அவள் 'வீட்டோடு' ஒரு தங்கை இருக்கிருளே அவள் என்ன சொல்கிருள் என்பதையும் சொல்லச் சொல்.

சீதையைக் காட்டிக் காட்டி, 'பாரத நாட்டுப் பாவையரே, பாருங்கள் அவளை, வாழுங்கள் அவளைப் போல்' என்று பேசுகிருர்களே புராணிகர்கள்; முதலில் அவர்கள் எல்லோரும் ராமனைப் போலிருக்கின்ருர்களா? அவ்வளவு ஏன்? ராமன் கதையில் துயரமான கட்டத்தை வர்ணிக்கும் போது கூட அடிக்கடி அவர் தம் கடைக் கண்கள் சீதைகள் இருக்கும் பக்கம் செல்லாமலிருக்கின்றனவா?

அண்ணு! நான் தினம் தினம் விடியற்காலையில் எழ ஆரம்பித்தேன். கிளையிலுள்ள இலைகளினூடே நிலவு தெரிகிறதல்லவா அதுபோல நான் சாளரத்தினூடே அவளைக் கண்டுவந்தேன். நிலவுக்கும் எனக்கும் எவ்வளவு தூரம்? என்ருவது நிலவு கிட்ட வருமா? ஆனுல் என் நிலவு ஒரு நாள் அருகே வந்தது.

ஒரு நாள் மாலை கல்லூரி முடிந்து வீடு திரும்பினேன். வரும்போதே தலை கனத்திருந்தது. வலி தாங்காமல் படுத்து விட்டேன். வர வர உடலில் வெப்பம் ஏறிக் கொண்டே வந்தது. கண்கள் சுழன்று மங்கின—பிணி வேகத்தில் நான் பித்தனுனேன். என்னென்ன பிதற்றினேனே அறியேன்—எவ்வளவு நேரம் அந்நிலையில் இருந்தேன் என்பதைக்கூட உணர முடியவில்லை. கண்விழித்துப் பார்க்கும் பொழுது அவள் என் அருகில் நின்றிருந்தாள்—என் நெற்றி மீதிருந்த அவள் தளிர்க்கரத்தை அப்போது தான் படக்கென்று எடுத்தாள். அவளைக் கண்ட மாத்திரத்திலேயே என்பாதி நோய் போய் விட்டது அண்ணு!

நான் திடுக்கிட்டவனைப் போல் எழுந்திருக்கமுயன்றேன்! வேண்டுமென்றே தள்ளாடினேன்! அவள் என்னை அள்ளித் தூக்கினுள்—பட்டும் படாததுமான அந்தப் பாதி அணைப்பு! எனக்குப் பாதி உயிர் வந்துவிட்டது அப்போதே!

'படுத்துக்கொள்ளுங்கள்—பால் கொண்டு வருகிறேன்' என்று சொன்னுள்—அப்போதுதான் வனத்திலிருந்து வந்த ஒரு கிள்ளை திடீரென்று வாய்விட்டுப் பேசினுல் எப்படியிருக்கும்! அவள் முகத்தை அண்ணுந்து பார்த்தேன். அன்னைக்குத்தான வாஞ்சை அதிகம் என்று சொல்வார்கள், ஆனுல் இவள் யார்? ஆபத்து வேளையில் தான் அன்பு உதயமாகுமோ?

பால் கொண்டு வரச்சென்ற பாவையைச் சுற்றிச்சுற்றி என் மனம் பறந்துவந்தது. முன்பின்

(10-ம் பக்கம் பார்க்க)


## சித்திரபுத்திரன் எழுதுகிருர்!

★

சித்திரபுத்திரன் என்ற புனை பெயரில் தலைவர் பெரியர் எழுதிய ஐந்து சுவையான உரையாடல்கள். படிக்கப் படிக்க இன்பமூட்டுபவை.

விலை 0-6-0

தபாலில் 0-7-0

**பகுத்தறிவுப் பாசறை**

பவழக்காரத் தெரு,
சென்னை 1.


**பொட்டுக்கட்டும் வழக்கம் போக்குதல் கனமோ?**

# தெய்வீகம் அல்ல தம்பி!

[பற்பல நூற்றாண்டுகளாகவே, பல்வேறு மூடநம்பிக்கைகள் தமிழகத்தில அகலக் கால் ஊன்றிக்கொண்டு, வெளியேற முடியாதென்று 'மறியல்போர்' நடத்துகின்றன. தமிழகத்தின் வளர்ச்சிக்கு ஊறுதோறும் அந்த மறியலை முறியடிக்கும் அற்புதமான ஆயுதம் அறிஞர் சிங்காரவேலரின் எழுத்து. அவருடைய பேனா நர்த்தனத்தின் ஒரு பகுதி சென்ற இதழில் வந்தது. இதோ மற்றொன்று. எதை எதையோ தெய்விகம் என்று நம்பி, ஏமாந்து, சிந்தனையைச் சிறைக்கூடமாக்கிக் கொள்ளும் தமிழ்நாட்டுத் தம்பிக்கு, சிங்காரவேலர் தரும் 'இஞ்செக்ஷன்' இக் கட்டுரை. ஒருநாட்டின்செழிப்புக்கும்சிறப்புக்கும்அந்தநாட்டில் பொருளாதார அரசியல் கிளர்ச்சிகள் நடந்தால் மட்டும் போதாது, அந்தநாட்டு மக்களின் சமுதாய வாழ்க்கையிலே காணப்படும் சீர் கேடுகளையும் கல்லியெறிந்தாக வேண்டும் என்பது இக் கட்டுரையை வாசிப்பவர்க்கு நன்கு புலனாகும்.]

தெருக்களில் கரும்பு விற்கும் இடங்களில் கரும்பு உடைக்கும் பந்தயமொன்று நடந்துவருகிறது. ஒருவன் 100 கரும்பைத் தனது கைமேல் அடித்து உடைத்துவிடுகிறான். ஆனால் நம்மைப்போன்றவர்களோ, ஒரு கரும்பை உடைக்கப் பயப்படுகின்றார்கள். இது தெய்வீகமா? பின் என்ன? அவன் உடைத்து உடைத்துப் பழக்கம். நீரும் நாமும் அந்தப் பழக்கத்தை உண்டாக்கிக் கொண்டால் அவனைப்போல் நாமும் 100 மாத்திரம் அல்ல, 200 வரை உடைத்தெறியலாம்! பழக்கம் மலையைத் தாண்டச்செய்யும்!

சிறு குழந்தைகள் பிச்சை எடுக்க தங்களுடைய வயிற்றைப் படீர் படீர், எனத் தங்கள் கையால் அறைகின்றார்கள். அம்மாதிரி நம்முடைய குழந்தைகள் அறைந்து கொண்டால் சுருண்டு கீழே விழுந்துவிடும். இதுவும் தெய்வீகமா எனக் கேட்கின்றேன்.

தலையில்கூட, தேங்காய்களை உடைக்கின்ற பழக்கம் நமது தேசத்தில் உண்டெனக்கேள்வி. எந்தவித அசங்கிதக் காரியங்களைத்தான் நம் நாட்டில் செய்யமாட்டார்கள்? இவைபோன்ற அசங்கித காரியங்கள் நமது காட்டுமிராண்டித் தன்மையைக் காட்டுகின்றனவே யொழிய நமது பக்தியையோ, அல்லது தெய்வீகத் தன்மையையோ காட்டவில்லை. இவ்வித காரியங்களைக் கண்டு நாம் தலைகவிழ்ந்து வெட்கமடைவதை விட்டுவிட்டு அவை தெய்வீகமா? அல்லவா? என்று கேள்வி கேட்பது வியக்கத்தக்கதுமல்லாமல் வருந்தத்தக்கதுமாகும்! இத்தியாதி மனப்பான்மையால்தான் நமது நாடு பல நூற்றாண்டுகளாக அடிமை வாழ்க்கையில் இருந்து வந்தது. இந்நிலைமையைக் குறித்து அயல் நாட்டார் நம்மைப் பரிகாசம் செய்தால் என்ன தப்பு?

நமது தமிழ் நாட்டில் மிகுதியாகப் பாமர மக்களிடத்து ஒரு மூடப் பழக்கம் அனுதினமும் பார்க்கின்றோம். அது யாதெனில் இறந்தவர்களைச் சுடலைக்குக் கொண்டு போகும்போது அதிக சத்தத்தோடு கொண்டுபோகும் பழக்கம். இது விசேஷமாகத் தாழ்த்தப்பட்டோர் எனக் கூறும் வகுப்பாரிடம் பெரிதும் காணலாம். உயர் குலத்தோர் என்று கூறும் பிராமண வைசியர்களில் சாவு மேளத்தைக் கேட்பதரிது. ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாகரிக நாடுகளில் சேனைத் தலைவர்களுக்குத் தவிர மற்றவர்கள் சாவுக்கு மேளம் அடிப்பதில்லை. ஆனால் இந்தப் பழக்கம் காட்டுமிராண்டிகளிடம் (Savage Tribes) அதிகமாகக் காணலாம், இந்தப் பழக்கத்தின் காரணத்தை அறிய வேண்டுமானால் காட்டுமிராண்டிகள் எண்ணியுள்ள எண்ணத்தை விசாரித்தால் தெரிய
வரும். அவர்களுக்குள் இறந்
வனைப்பற்றி இரண்டு மூட நம்பிக்
கைகள் உண்டு. அவையாவன:—
அவர்களில் இறந்த மனிதனுடைய
உயிர், ஆவி, (Spirit, Soul) உடலை
விட்டு நீங்கியதும் அருகாமையி
லுள்ள செடியிலோ, விருட்சத்
திலோ, ஜலத்திலோ ஒளிந்து நிற்கு
மாம்! அந்த 'ஆன்மா' உயிருடன்
இருப்பவர்களைத் தொந்திரவு செய்
யுமாம்!! ஆதலின் அதனைச் சத்த
மிட்டுவிரட்டித்துரத்தவேண்டுமாம்
அதற்கு சத்தமிட்டும், இரைச்சலிட்
டும், கூச்சல்போட்டும், வாத்திய
களால் பேரொலியை உண்டாக்
யும் ஆன்மாவைப் பயப்பட
செய்து ஓடச்செய்வதற்கு ஏற்பட்
னவே தப்பட்டை, பேரி, சங்கு மு
லிய வாத்தியங்கள்! இரைச்ச
அதிகமிட, அதிகமிட இறந்தவ
'ஆன்மா' அதிக விரைவாக ஓ
விடுமாம்! இந்தக் காட்டுமிராண்
மூடப்பழக்கத்தை நமது தமிழ் ம
களும் அனுசரித்து வருகின்றார்க
நமது நாடுகளில் சாவு மேள
களின் காரணம் ஆதிகாலக் காட்
மிராண்டிகளாக இருந்து வ
நமது மூதாதைகளின் உத்தேச
களென அறியவும். சாவு மேள
களுக்கு ஆதாரம் காட்டு மிரா
டிப்பழக்கமாக இருக்க இத
தற்காலம் வேறுவித அர்த்
களும், வியாக்கியானங்களு
கொடுக்கிறார்கள். அரசர் இ
தாலும், சேனைத் தலைவர் இறந்
லும் சாவு மேளம் அதிகமாக உ
யோகிக்கின்றார்கள். நமது நா
டில் எளியவன் இறந்தால் அ
லுள்ள வாத்தியங்கள் எல்லா
முழங்கும்! ஏன்? எளியவ
'ஆன்மா' எளிதில் துரத்தப்ப
மாம்! ஆனால் தனவந்தனுடைய
'ஆன்மா'வோ பலத்த சத்தத்தி
னால் ஓட்ட முடியுமாம்!! இ
எண்ணங்கள்தான் சாவு மேள
களுக்கு அடிப்படையாகவுள்ள
இறந்தவனை வாத்திய கோ
யாலும் மரியாதை செய்வதெ
பது பிறகு கொடுத்துவரும் விய
கியானமென அறிக. எதா
னமோ செத்தவன் 'உயிர்' திரு
வும் வரவொட்டாமல் செய்வத
ஏற்பட்ட மேள வாத்தியங்களே

**பாழ்படும் பழமை சூழ்வது திறமா?**

அறிக. காட்டு மிராண்டிப் பழக்கங்களில் சிலவற்றை இன்னும் உயர் மக்கள் என்று கூறும் பிராமணர்களிடமும் காணலாம். பிராமணர்களிடம் ஒரு துர்ப்பழக்கம் இருந்து வருகின்றது. அதாவது இறந்தவனை சாதாரண வாசல் வழியாகக் கொண்டு போகாமல் சுவரில் துவாரம் செய்து, சவத்தை அவ்வழியாக எடுத்துக்கொண்டு போன பிறகு அந்தத் துவாரத்தை அடைத்து விடுவார்கள். இதுவும் காட்டு மிராண்டிப் பழக்கங்களில் ஒன்று. இந்தப் பழக்கத்திற்கு காட்டு மிராண்டிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் பழைய வழியாகப் போனவன் இறந்தால் அவன் "ஆன்மா" அந்த வழியே திரும்பவந்து விடுமாம்! புதிய துவாரத்தின்வழியாக எடுத்துவிடப்பட்ட, அந்த "ஆன்மா"வுக்குப் பழைய வழி தெரியாமையால் அது அந்தப் பழையவழியில் நுழையாமல் தடுத்துவிடப்படுமாம்! செத்தவன் ஆன்மாவை ஏமாறச்செய்யும் சூழ்ச்சிகளில் இது ஒன்று. இன்னும் பல மூட சூழ்ச்சிகளைக்கொண்டு "ஆன்மாவை" மயக்கச்செய்து விடுகிறார்கள். இறந்தவனை வீட்டை விட்டு சுடுகாட்டுக்குக் கொண்டு போகையில் சாணிச்சட்டியை உடைக்கிறார்கள். இதுவும் காட்டு மிராண்டிகளின் மூடப் பழக்கத்தை அனுசரித்து நடப்பதாகும். காட்டுமிராண்டிகளுக்குள் ஒரு கற்பனையுண்டு. அதாவது, பேய், பிசாசுகள் தண்ணீரைத் தாண்டாவாம்! தண்ணீரில், இன்னும் சாணித்தண்ணீர் விசேஷம். சவத்தின் பின் ஊற்றினால் அதன் ஆன்மா, தெளித்த தண்ணீரைத் தாண்டாவென்று எண்ணி இந்தப் பழக்கம் நாளைக்கும் நம்மவர் செய்து வருகின்றனர். கொள்ளி வைத்தவர்கள் சுடுகாட்டை விட்டு வீட்டுக்குத் திரும்பும்போது கடலிலாகிலும், குளத்திலாகிலும், ஆற்றிலாகிலும் நீரில் காலை நனைக்க வேண்டுமென்ற பழக்கம் இதனால் ஏற்பட்டதென அறியவும். இவர்கள் காலடி தண்ணீரில் மறைந்து விடுமாததால் செத்தவன் "ஆன்மா"வும் காலடி வைத்த பின் தொடர்வதற்கில்லையாம்! திருடர்களும் தங்கள் காலடிகளைத் தண்ணீரில் இறங்கி மறைத்து விடுவதைப் போன்றதென அறிக. பின் தொடர்ந்த நாய்கள், அங்கு வந்து மயங்குவதைப் போல், "ஆன்மா"வும் மயங்கி விடுமாம்! கொள்ளி வைத்தவர்கள், எரியும் சவத்தைத் திரும்பிப் பார்க்கக் கூடாதென்ற பழக்கமும் இந்த ஆன்ம சித்தாந்தத்திலிருந்து ஏற்பட்டதாகும். கொள்ளி வைத்தவர்கள் முகம் செத்தவனுடைய ஆன்மாவுக்குத் தெரியுமாதலால், வீட்டுக்கு அவர்கள் திரும்பும் காலை அவர்கள் எரியும் பிணத்தை திரும்பிப்பார்க்கும் பட்சத்தில், வேகும் பிணத்தருகே அலைந்து கொண்டிருக்கும் அதன் "ஆன்மப் பேய்" (The soul hovering near the burning corpse) அவர்களுடன் தொத்திக்கொண்டு, வீட்டுக்கு வரும் என்ற கற்பிதபயத்தால் சேர்ந்த பழக்கமென அறிக.

வீட்டுக்கு அருகே வந்தபோதும், வீட்டில் நுழைவதற்கு முன்னும், கால்களைக் கழுவிக்கொண்டு உள் நுழைய வேண்டுமென்ற பழக்கமும், இந்த ஆன்ம சித்தாந்தத்தை தழுவி நிற்கின்றதென்று அறியவும். எப்படியெனில், பேய், பிசாசுகள், தண்ணீரைத் தாண்டாவாம்! இதே காரணத்தை ஒட்டியே தற்கால பிராமணர்கள், தாங்கள் சாப்பிடும்போது, இலையைச் சுற்றி ஜலம் தெளித்துக்கொண்டு, சாப்பிடுவதுமுண்டு. ஜலத்தைத் தாண்டிக்கொண்டு பேய், பூதங்கள், உண்ணும் உணவை உண்ணாவாம்!!

விடியற் காலங்களில் சாணித் தண்ணீரை வீட்டுக்கு எதிரில் தெளிப்பதும் இதே காரணத்தினால் என அறிக. பாதி ராத்திரி முதல் கதவு சாத்தப்பட்டு நுழைய வழியில்லாமல் வெளியில் இருந்த பேய் பிசாசுகள் கதவைத் திறந்தவுடன் உள் நுழையாதிருக்க சாணித் தண்ணீர் தெளிக்கும் வழக்கம் உண்டாயிருக்கவேண்டும். சாப்பிடும்போது, விளக்கு அவிந்துவிட்டால், உண்ணும் உணவை எடுத்துவிட்டு, தீபமிட்ட பிறகு தண்ணீரைத் தெளித்தும் தனது தலைமேல் தண்ணீரைத் தெளித்துக்கொண்டும் திரும்ப உண்ணுவது சில இடங்களில் பார்க்கலாம். இதுவும், இந்தப் பேய் கற்பிதத்தால் பழக்கத்திற்கு வந்திருக்கவேண்டும். இருட்டில் தான் பேய் பிசாசுகள் உணவை உண்ணுமாம்! விளக்கு அவிந்தவுடன் பேய் பிசாசுகளால் உண்ணும் உணவு தீட்டுப்பட்டுவிட்டபடியால் மறுபடியும் அந்த உணவைத் தின்னத் தகாதென்பதும், விளக்கு ஏற்றியவுடன், பேய் பிசாசுகள் ஓடிவிடுமாகையால், அப்போது புதிய உணவை உண்ணலாமென்பதும் ஓர் குயுக்தி என எண்ணவேண்டியிருக்கிறது.

இவ்வித மூடப்பழக்கங்களெல்லாம், மனிதன் இறந்த பிறகு அவன் "ஆன்மா" வெளியில் உலாவுகின்றது என்ற கற்பிதத்தால் வந்தவை. மனிதனுக்குள் ஓர் "ஆன்மா" இருந்து வருகிறது. அந்த "ஆன்மா" பெருவிரல் பருமனுள்ளது. தேகம் மரித்த பின்பு, அந்த "ஆன்மா" செத்தவன் வீட்டுப் பக்கங்களிலும், அடுத்த செடிகளிலும், சுடுகாடுகளிலும் தங்கியிருக்கும். இந்த ஆன்மாக்கள்தான், "பேய்" "பிசாசு"களாக மனித சஞ்சாரமில்லாத இடங்களில் உலாவிக் கொண்டிருக்கும். இருளிலோ, அல்லது "உருமவேளை"யிலோ (மத்தியானம்) "ஒண்டி சண்டியாக" (தனிமையாக) யாதாமொருவன் தனித்த இடங்களில் போவானேயாகில், அவனை இந்தப் பேய், பிசாசு, அண்ணமார், தம்பிமார், கன்னிமார், முனீஸ்வரன் முதலிய "பூதப் பேய் பிசாசுகள், இவனை அறைந்து" நோயால் பாதைப்படும்படி செய்துவிடுகின்றனவாம். இந்த நம்பிக்கைதான் உலக முழுமையும் நிறைந்து வருகிறது. பேய்களுக்கும், பிசாசுகளுக்கும், முனிவர்களுக்கும், காற்று கருப்பன்களுக்கும், இந்த "ஆன்மா" கற்பிதமே காரணமாகும். ஆன்மா ஒன்றுண்டென்ற நம்பிக்கை கற்பிதமென்று நமது பாமர மக்கள் உணர்வார்களேயாகில், இக்கற்பிதப்பேய் பிசாசுகள் உலகை விட்டுப் பறந்தோடிப்போமென அறிக.

**பகுத்தறிவால் நலம் வகுப்பது திறமா?**

போர்வாள்

2—10—48 சனிக்கிழமை

# "தூக்குமேடை" தயார்

ஆம், அப்படித்தான் சொல்கிறார் அன்பர் அவினாசியார்.

அவினாசியாரின் குரலிலே தயக்கம் இல்லை. அவருடைய பேச்சிலே ஒளிவுமறைவு இல்லை. அவருடைய கண்களிலே மருட்சியோ திகைப்போ இல்லை. அவருடைய உள்ளத்திலே இரக்கமோ பச்சாதாபமோ கவலைக் குறியோ இருப்பதாகத் தெரியவில்லை!

திட்டமாக, தெளிவாக, அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார் அவினாசியார், "தூக்குமேடை" தயார் என்று!

மேடை அமைத்துவிட்டாரம், தூக்குமரமும் அதில் நிலை நாட்டிவிட்டாராம், தூக்குப் போட ஆட்களையும் தேர்ந்து எடுத்து நிறுத்திவிட்டாராம், "போடு தூக்கில்" என்ற தாக்கீதையும் முன்னரே பிறப்பித்துவிட்டாராம், கூறுகிறார் அவினாசியார்—வருத்தத்தோடல்ல—கம்பீரத்தோடு! சிங்க ஏறு போன்ற தோற்றத்தோடு! என்னை யார் என்ன செய்ய முடியும் என்ற இறுமாந்த நோக்கோடு!

என் சித்தம் உங்கள் பாக்யம்! என் கருத்து உங்கட்குக் கட்டளை! என் உதடு அசைந்தால் உங்கள் உள்ளம் அசையவேண்டும்! என் பேனா முனை போகும் வழியை நீங்கள் உங்கள் வாழ்க்கை வழியாகக் கொள்ளவேண்டும்—தவறினால் தூக்கு மேடை தயார் என்று பேசுகிறார், கொஞ்சம் கனைத்துக் கொள்கிறார், பெருமிதமான நோக்கோடு அப்படியும் இப்படியும் பார்க்கிறார், மறுபடியும் சொல்கிறார் எழுத்து எழுத்தாக—அசை அசையாக—சீர் சீராக: "தூக்குமேடை தயார்!"

சொன்ன இடம் கேட்கிறீர்களா? சென்னை சட்டசபை!

சொன்ன நாள் தேவையா? செப்டம்பர் 28 செவ்வாய்க்கிழமை!

சொன்னார் என்பதற்கு ஆதாரம் வேண்டுமா? 28-9-48 சுதேசமித்திரன் பக்கம் 8 கலம் 5 ஐப் பாருங்கள்! அதில் நம்பிக்கையில்லாவிட்டால், அதே தேதியில் வெளியான 'மெயில்' ஏழாம் பக்கம் பாருங்கள்! அதிலும் நம்பிக்கை இல்லாவிட்டால் அடுத்த நாள் பாரததேவியை வாங்கிப் பாருங்கள்!

"தூக்குமேடை" எதற்காக அமைத்திருக்கிறாராம் தெரியுமா? அவருடைய கட்டளையை மீறி நடந்தவர்களைத் தண்டிக்க!

அவருடைய கட்டளையை மீறுவதே கூடாதா அது எவ்வளவு தவறானதாயினும் என்று கேட்கிறீர்களா? கேட்பதே ராஜத்துரோகம்!

தவறிக் கேட்டால்......

சிறை!

அது தவிர......

தவிரவா?......கண்ணீர்ப் புகை, 144, தடியடி, துப்பாக்கிக் குண்டு, கசையடி, திக்குத் தெரியாத காட்டில் தவிக்க விடுவது, இன்ன பிற, இன்ன பிற......

இதன் பெயரா சுயராஜ்யம்?......

ஆம், இதன் பெயர்தான் சுயராஜ்யம்!

சுயராஜ்யமா......!

ஆமாம், வெறும் சுயராஜ்யமல்ல, பூரண சுயராஜ்யம்!

பூரண சுயராஜ்யமா......

பரிபூரண சுயராஜ்யம்!

அவினாசியார் யாரைப் பார்த்து "தூக்குமேடை" தயார் என்று கூறுகிறார்?

தமிழ்ப் பண்டிதர்களைப் பார்த்து!

அவர்கள் செய்த குற்றம் என்னவாம்?

தமிழ் வாழ்க என்று கூறியது!

தமிழ் வாழ்க என்று கூறுவதே குற்றமா?

ஆம், அபபடித்தான் கூறுகிறார் அவினாசியார்!

ஆமாம் நண்பர்களே, அவினாசியார் அப்படித்தான் கூறுகிறார்! தமிழ் வாழ்க என்று கூறுவது குற்றமாம்! தமிழ் வாழ்வதற்கான பணிகளைப் புரிவது அதனினும் பெரிய குற்றமாம்! தமிழின் வளர்ச்சிக்குத் தடைக் கற்களாய்க் கிடத்தப்படும் முட்டுக்கட்டைகளை அப்புறப் படுத்துவதோ மன்னிக்கமுடியாத குற்றமாம்! ஏனெனில், சர்க்கார் தமிழின் வளர்ச்சிக்குத் தடை கிடத்துவது என்று முடிவு செய்துவிட்டார்களாம்! அவர்கள் அப்படி முடிவு செய்வதற்கு முன்னால் தமிழின் வளர்ச்சிக்காக, தமிழ்ப் புலவர்கள் எவ்வளவு பாடுபட்டிருந்தாலும் அதை மேன்மை தங்கிய அமைச்சர் பெருமகனார் தவறாக எடுத்துக் கொள்ளமாட்டாராம். ஆனால் சர்க்காரின் திட்டம் வேற்று மொழிகளை கட்டாய பாடமாக்குவதன் மூலம் செந்தமிழின் சிறப்பைச் சிதைப்பதுதான் என்பது தெளிவாக விளக்கப்பட்ட பிறகும் புலவர்கள் வேற்று மொழிப் படையெடுப்பிலிருந்து தமிழை மீட்பதற்கான "ராஜத்துரோக" நடவடிக்கையில் ஈடுபடுவார்களானால் அதனை சர்க்காரால் பொறுத்துக் கொள்ள முடியாதாம்! எனவே சர்க்கார் அத்து மீறி நடக்கும் [அதாவது வடநாட்டுக் கலாசாரப் படை

**தாழ்பவர் தம்மைத் தாழ்த்துதல் சால்போ?**

யெடுப்பினின்று செந்தமிழைக் காப்பாற்றும் பணி புரியும்] இத் தமிழ்ப் புலவர் கூட்டத்தின்மீது சட்டப் படி நடவடிக்கை எடுக்க முடிவு செய்து விட்டதோடு, கல்வி இலாகா டைரக்டருக்கும் இந்த 'தூக்குமேடை' உத்தரவை உடனடியாக நிறைவேற்றி வைக்கும் படியாக கட்டளை அனுப்பிவிட்டார்களாம்!

வடநாட்டு கலாசாரத்திற்கும், ஆதிக்க அரசியலுக்கும், வடநாட்டவரின் பொருளாதாரச் சுரண்டலுக்கும் தக்க கருவியாகத் துலங்கும் இந்தி மொழியை சர்வ கட்சித் தமிழர்களின் ஒன்றுபட்ட விருப்பதற்குமாறுக தமிழகத்தில் வலுக்கட்டாயமாகத் திணிக்கிறதல்லவா நமது அருமை ஓமந்தூரார் சர்க்கார், அந்த அதி அற்புத அதிமேதாவித்தனத்தை எதிர்த்து இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்களாம் தமிழ்ப் புலவர்களிற் பெரும்பாலோர்! எனவேதான் சர்க்கார் கல்வி இலாகா டைரக்டரைக் கொண்டு தூக்குமேடை அமைக்கிறதாம்!

"தூக்குமேடை தூக்குமேடை என்று பயங்கரமான சொல்லைப் போடுகிறீரே என்னப்பா அது?" என்கிறீர்களா? அந்தப் பயங்கரமான பெரிய சொல்லுக்கு உள்ள எளிமையான—எல்லார்க்கும் புரியும் பொருள் என்ன தெரியுமா? **வேலையை விட்டு விலக்குவது** என்பது!

அட செ! இதுதானா? என்னவோ ஏதோ என்றெண்ணினோமே என்கிறீர்களா? ஆமாம், நமக்கும் கூட அற்பமாகத்தான் படுகிறது இந்த "தூக்குமேடை விவகாரம்" ஆனால் அன்பர் அவினாசியார் என்னவோ அதைப் பிரமாதமாக எண்ணுகிறார்!

**வேலையை விட்டு விலக்குவது!** இந்த வாசகத்தைச் சொன்ன உடனே தமிழ்ப் புலவர்கள் அலறிப் புடைத்துக் கொண்டு பயந்து பதுங்கி இந்தி தேவதைக்கும் அதன் பிரதம பூஜாரியாக விளங்கும் அன்பர் அவினாசியாருக்கும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து விட்டு தமிழைப் பற்றிய கவலையையே அடியோடு விட்டு விடுவார்கள் என்று அவர் எண்ணுகிறார் போலிருக்கிறது!

ஐயோ பாவம், அவினாசியார்! அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிறார்! 10 ஆண்டுகளுக்கு முன் இருந்த "பயந்தாங்கொள்ளிப்" பண்டிதர்களை எண்ணத்தில் வைத்துக்கொண்டு இப்போதுள்ள சிங்க ஏறுகள் போலும் புலவர்களை "காலித் துப்பாக்கி" கொண்டு மிரட்டுகிறார்.

அன்பர் அவினாசியாருக்கு நாம் கூற விழைகிறோம்: இது அக்காலம் இல்லை ஐயன்மீர்! இன்று இருப்பவர்களும் **பண்டிதர்கள்** அல்ல அமைச்சரீர்! **புலவர்கள்** இவர்கள்! எலி எனத் தம்மை இகழ்ந்தவர் நடுங்க புலி எனச் செயல் செயும் மாவீரர்கள்! தமிழுக்கு ஆபத்து என்றால் அது போக்க, தம் உயிரையும் அறப் போரில் பலியாக்கத் துணிந்து நிற்கும் தீரர்கள்! வேலை—அது வெல்லமல்ல அவர்களுக்கு! தமிழ்—அது அவர்கள் பெற்ற பெறலரும் பேறு. தம் வேலையைப் பறிகொடுப்பது அந்தப் பேறு நின்று நிலவுவதற்குச் சிறிதேனும் பயன்படுமானால், அந்த

(9-ம் பக்கம் பார்க்க)

நம் தலைவர்

# பெரியார் வாழ்க!

[ஆரை நற்கோவன்]

## 1

கட்சிபல நாட்டிலுண்டு, கட்சியெல்லாம்
கலந்துநின்று மெய்வேடம் கொண்டுநின்ற
நச்சரவப் பொய்யர்களை நம்பிநம்பி
நாலுகட்சி சாதிமத மாய்ப்பிரிந்து
மெச்சுறுநற் பேரறிஞர் உழைப்பையெல்லாம்
விழலுக்கே நீரிறைத்த நிலைமைகண்ட
இத்திருநாட் டவர்க்கொளிசேர் நெறியைக்காட்டும்
ஈ. வெ. ரா. ஈரோட்டுச் செல்வன்வாழி!

## 2

மாநிலத்தின் விடுதலைக்காய் வகுத்தபோரில்
மலைத்துநின்ற மலையாள நாட்டிலங்கே
ஈனமுறு தீண்டாமைப் பேய்களோட
இணையற்ற வைக்கப்போ ராற்றிப்பின்னும்
மானமுறு தமிழிளைஞர் தலைவராய்த்தனி
மானஇயக்கம் படைத்தே எழுபதாண்டு
வானமுக டதிரமுழக்கங்கள் செய்து
வரும்அரியேறும் பெரியார் என்றும்வாழ்க!

## 3

சிந்திக்க நல்லுள்ளம் பெரியார்கொள்கை!
தினம்துதிக்க நாவெல்லாம் பெரியார்நாமம்!
வந்திக்க தலைகளெலாம் திராவிடத்தின்
வணங்காத வீறுகொண்ட கொடியே! எங்கும்
செந்தமிழ்நாட்டில் சீரார் தமிழேவாழ்க!
சிறியமொழி ஏனைமொழி எட்டிச்செல்க!
இந்தஎழு பதினாண்டேஇனும் பல்லாண்டு
சந்தமுறு தமிழ்த்தலைவர் நீடுவாழ்க.

**தனம் காப்பவர் தங்கள் இனம் காத்தல் சால்போ?**

# நாவினால் சுட்ட வடு!

உலகப் பெருங் கவிஞர் திருவள்ளுவர் அழகாகச் சொன்னார் **தீயினால் சுட்ட புண் உள் ஆறும், ஆறாதே நாவினால் சுட்ட வடு** என்று!

தீ உடலிலே பட்டால் புண் ஏற்படும், உடலை வருத்தும், வாட்டும், வேதனைப்படுத்தும், ஆனால் சில பல நாள் சென்றபின் வேதனை குறைந்து, வாட்டம் மறைந்து, வருத்தம் தீர்ந்து, புண் இருந்த இடம்கூட தெரியாமல் மறைந்து போய்விடுவதுண்டு. தீ சுட்ட ஞான்று எவ்வளவுதான் வேதனை தந்தாலும் பிறகோர் நாள் அந்த வேதனையை நாம் அடியோடு மறந்துவிடுவோம், தீப் புண் ஒன்று நம உடலில் இருந்தது—வேதனை அதிகம் தந்தது—வருந்தினோம் நாம் அதனால் என்ற எண்ணமேகூட நம் உள்ளத்தைவிட்டு அகன்று விடும். ஆனால் பிறர் நம்மைத் தாக்கினால், நம்மீது கூறத்தகாத வசைமொழி கூறி, நம் உள்ளத்தை வேதனைப் படுத்திவிட்டால், இழிசொல் பல புகன்று நம் இருதயத்தில் புண் ஏற்படுத்திவிட்டால், அந்தப் புண் என்றும் ஆறுவதே இல்லை. ஆம்! ஆகவேதான் திருவள்ளுவர் கூறினார் தீயினால் சுட்ட புண் ஆறும் ஆனால் ஆறாது நாவினால் சுட்ட வடு என்று!

அவினாசியார்—நமது மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர்—இந்தி நுழைவால் தமிழ் கெடும் என்று மனமார நம்பி, இந்திக் கொடுமையிலிருந்து தமிழையும் தமிழரையும் மீட்க கிளர்ச்சி செய்யும் தமிழ்ப் பெருங்குடி மக்களை **விஷமிகள்** என்றும், அவர்களின் சிறந்த பொது நலத் தொண்டை **விஷமிகளின் துர்ப் பிரசாரம்** என்றும், அந்த அறப் போர்க் கிளர்ச்சியால் நாட்டில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை **சில விஷமிகளின் துர்ப் பிரசாரத்தால் நாட்டு மக்களில் சிலர் மதி இழந்திருக்கின்றனர்** என்றும் சட்டசபையில் சென்ற கிழமை கூறியிருப்பதாக **சுதேசமித்திரன்** 28-9-48, இதழில், 8-வது பக்கத்தில் செய்தி தருகிறது.

இது உண்மையானால், அவினாசியார், தமிழர் சமுதாயத்தால் என்றைக்குமே மறக்க முடியாத, தமிழர்களால் எப்போதும் மன்னிக்க முடியாத அறக் கொடுஞ் செயல் ஒன்றை செய்து முடித்துவிட்டார் என்பதில் நடுநிலை உள்ளம் படைத்த எவருக்கும் இரண்டுவித கருத்து இருக்க முடியாது.

அவினாசியார் கூறியதாக சுதேசமித்திரன் கூறும் இந்த வாசகம் வெறும் வாசகமல்ல; கொடிய நஞ்சு. பொது வாழ்க்கையில் தலைகாட்டக்கூடாத மிகக் கொடிய நஞ்சு.

**விஷமிகள்!** எவ்வளவு கீழ்த்தரமான வார்த்தை! இது எத்தகைய பெருந் தலைவர்களையும், எத்தன்மையரான அறிஞர் பெருமக்களையும், தமிழகத்தின் தலைசிறந்த ஆன்றோரையும் சான்றோரையும் குறிப்பிட பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை எண்ணும்போது நம் உள்ளம் திடுக்கிடுகிறது, குருதி கொதிக்கிறது. பேனா, மேலே ஓட மறுக்கிறது.

இந்தியை எதிர்த்தக கிளர்ச்சி செய்பவர்கள் எல்லாம் விஷமிகள் என்று அவினாசியார் கருதுவதானால் யார் யாரெல்லாம் அந்தப் பட்டியலில் வருகிறார்கள் பாருங்கள்:—அடக்கமே உருவான அறிவுக் கடல்—பேரறிஞர்—மறைமலை அடிகள், சாது முதலியார் எனப் பெயர் படைத்த தமிழ்த் தலைவர்—அறிஞர் திரு. வி. க, புலமைத் திறம் சான்ற மூதுபெருந் தமிழர் நாவலர் பாரதியார், எழுத்தாளர் தலைவா நாரண துரைக்கண்ணன், தமிழகத்தைத் திருத்திய தீரர் பெரியார், தமிழ் நாட்டு பெர்னாட்ஷா எனத் தகும் அண்ணா, தமிழ் முரசு—ம. பொ. சி, இவ்வளவு பேரும் வருகிறார்கள் பட்டியலில்! இவர்கள் யாவரையும் சேர்த்து விஷமிகள் என்று சொல்லும் நெஞ்சுத் துணிவு ஒரு தமிழ் மகனுக்கு—அதிலும் ஓர் அமைச்சருக்கு—அதிலும் மதிப்புமிக்க கல்வி அமைச்சருக்கு—அதிலும் நம் நண்பர் அவினாசியாருக்கு இருக்கும் என்று நம்மால் நம்ப முடியவில்லை. இது பெரிதும் சுதேசமித்திரனின் கோட்சேத்தனமாகத்தான் இருக்க வேண்டும்— அப்படித்தான் இருக்கும் என்று நாம் கருதுகிறோம்—அப்படியின்றி உண்மையிலேயே அவினாசியார் தமிழ்நாட்டுச் சான்றோர்களையும் ஆன்றோர்களையும் அறிஞர் பெரு மக்களையும் விஷமிகள் என்று மனந் துணிந்து கூறியிருந்தால், இப்படிப்பட்டவர் பிறந்த நாட்டிலும் காலத்திலும் நாமும் பிறந்தோமே என்பதற்காக வெட்கப்படுகிறோம். தாங்க முடியாத துக்கமும் அடைகிறோம். ஓர் உண்மைத் தமிழ் மகனாய அவினாசியார் பெயருக்கு இத்துணை பெரிய களங்கம் வந்ததே என்று அவமானம் அடைகிறோம். தமிழ் இனத்திலே பிறந்த ஓர் அமைச்சர் தன் இனத்தின் சான்றோர்களை விஷமிகள் என்று கூறும் அளவுக்குத் தாழ்ந்து போனார் என்ற சேதி வரலாற்றிலே இடம் பெறுமே, பெற்றால் அது தமிழ் இனத்தின் தன்மானத்திற்கே ஊறு தேடுமே என்றெண்ணி நெஞ்சம் கவல்கிறோம். அவினாசியார் உண்மையை விளக்குவாராக.

---

வெளிவந்துவிட்டது!

**ஈரோட்டுப் பாதை!**

2-ம் பதிப்பு

சுயமரியாதை இயக்கம் வளர்ந்த விதத்தைச் சுவைபடச் சித்தரித்துள்ளார் **இளஞ்செழியன்**, இந் நூலில்.

விலை **0—6—0**

**பகுத்தறிவுப் பாசறை**
147, பவழக்காரத் தெரு,
சென்னை 1.

**ஆழ்வுறும் ஆத்திகம் வைதிகம் சுகமா?**

## கல் எறியவில்லை!

பயிர்த்தொழில் அமைச்சர் கனம் மாதவ மேனன் 26-9-48 ஞாயிறு மாலை ராஜமங்திரியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில், **கடந்த இரண்டு ஆண்டுகளாக மக்கள் நன்மைக்காக என்று தங்களுடைய சர்க்காரால் எதுவும் செய்யமுடிய வில்லை என்றாலும், மக்கள் தாராள மனோபாவமும் சகிப்புணர்ச்சியும் உடையவர்களாய் இருப்பதால் மந்திரிகள் மீது கல் எறியவில்லை** என்று குறிப்பிட்டிருக்கிறார். இது 28-9-48 மெயில் இதழில் காணப்படுகிறது.

இந்தஒருவாக்கியத்திலிருந்துஐந்து அரிய கருத்துகள் புலனுகின்றன.

1. காங்கிரஸ் சர்க்கார் மக்கள் நன்மைக்கான பணி எதுவும் செய்யவில்லை.

2. எனவே மக்கள் கொதித்தெழுந்து ஆத்திரப்பட்டு, மந்திரிகள் 'பவனி' வரும்போது அவர்கள் மீது கல் எறிந்தாலும் அது வியப்படைவதற்கு உரியதல்ல. எதிர்பார்க்கக் கூடியதே.

3. என்றாலும் மக்கள் கல் எறியாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் மந்திரிகளின் நற்பண்பு அல்ல, மக்கள் தாராள மனோபாவம் கொண்டவர்களாய் இருப்பதுதான்.

4. மந்திரி, தானும் தன் சர்க்காரும் மக்கள் நன்மைக்காக என்று ஏதும் செய்யாததால் மக்களிடமிருந்து பாராட்டுதலையோ புகழ்மாலையையோ எதிர்பார்க்கவில்லை. ஆகவே அவை இல்லாதது கண்டு அவருக்கு துக்கமோ வெட்கமோ தோன்றவில்லை. அது சர்வ சாதாரணமான இயற்கைநிகழ்ச்சியாகவே அவர் உள்ளத்திற்குப் படுகிறது.

5. மக்கள் தன்மீது கல் எறியாமல் இருந்தாலே போதும் என்று எண்ணுகிறார் அமைச்சர். ஏனெனில் தன் சர்க்கார் மக்களுக்குச் செய்துள்ள நன்மை அவ்வளவு அதிகம் (!) என்பது அவருக்கு நன்றாகத் தெரியும்.

ஒரே வாக்கியத்தில் எவ்வளவு உண்மைகளைத் திணித்துவைத்திருக்கிறார் கனம் மாதவ மேனன்! ஒருக்கால் அவர் திருக்குறள் பக்தரோ! இல்லாவிட்டால் எப்படி அவரால் இந்தச் சின்னஞ் சிறிய வாக்கியத்தில் இவ்வளவு பெரிய பெரிய கருத்துக்களை நுழைத்திருக்க முடியும்?

—

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

"வேலை"யை வீசி எறிவதற்கு அவர்கள் சிறிதும் தயங்கமாட்டார்கள். ஆமாம் அமைச்சரே, அதோ பாரும், அந்த ஈரோட்டுப் பக்கம், தன் வெண்தாடியை அசைத்த வண்ணம் வீற்றிருக்கும் அந்த சிந்தனைச் சிற்பியைச் சூழ்ந்துகொண்டு, எண்ணற்ற புலவர்கள், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள போர் அடுத்த திங்கள் தொடங்கப்படும்போது அதில் முதற்கண் குதித்திடும் பேற்றினைத் தங்கட்கே வழங்கவேண்டும் என்று வற்புறுத்துவதையும், "வேண்டாம் வேண்டாம்! போரிலே நீங்கள் இறங்கினால் நீங்கள் மட்டும்தான் படை வீரர்களாக உலவ முடியும், ஆனால் பள்ளியிலே இருந்துகொண்டு, மாணவர்களைப் போர் வீரர்களாக்கும் அரிய பணியினைத் தொடர்ந்து நடத்தினால் எண்ணற்ற போர்வீரர்கள் தினம் தினம் எங்கட்குக் கிடைத்த வண்ணம் இருப்பார்கள்! போர் வீரர்களாக இருப்பதைவிட போர் வீரர்களை மேலும் மேலும் தயாரிக்கும் பாசறைத் தலைவர்களாக இருப்பது இன்னும் சிறந்த தொண்டல்லவா?" என்று அந்த அடலேறு அதற்கு விடை கூறுவதையும் கூர்ந்து கவனியும். அமைச்சரே நினைவில் வைத்துக்கொள்ளும், தமிழ் இனம், வீரர்கள் வாழும் இனம். வேலைக்காகவோ ஏனைய வசதிக்காகவோ ஒரு சில வெள்ளிக் காசுக்காகவோ தாய் மொழிக்குத் துரோகம் செய்யும் ஜுடாஸ்களைக் கொண்டுள்ள இனம் அல்ல, சேரன் செங்குட்டுவர்கள் வாழும் இனம்—ஜான் அமெரிகள் வாழும் இனமல்ல. தாளமுத்துகளை நடராசர்களைத் தன்பால் கொண்ட இனம்—குடிகெடுக்கும் குவிஸ்லிங்குகளைக் கொண்ட இனமல்ல!—நினைவில் நிறுத்துங்கள் இந்தச் சேதியினை! பிறகு தொடங்குங்கள் வேலை விலக்கு படலத்தை!"

—

## மதிப்புரை

—

### வாழ்க்கையில் வெற்றி

[ஆசிரியர்: M. R. M. அப்துர் ரஹீம் B. A. விலை 2-8-0 யூனிவர்சல் பதிப்பகம், 155/156 அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை 1.]

வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம் என்ற சாக்குருவி வேதாந்தத்தில் ஈடுபட்டு, அன்று எழுதியதை அழித்து எழுத யாரால் முடியும் என்று கூறிச் சோம்பிக் கிடக்கும் நமது சமுதாயத்திற்குச் சரியான தோர் சவுக்கடி இந்த நூல். "நீ வாழவேண்டுமா— அது உன் கையிலேதான் இருக்கிறது. உனக்குத் துன்பமே அணுகாதபடி செய்துகொள்ளவேண்டுமா —அதுவும் உன் கையிலேதான் இருக்கிறது. உன் சரீரத்தை அழகுபடுத்தி ஆரோக்கியத்துடன் வாழவேண்டுமா—அதுவும் உன் கையிலேதான் இருக்கிறது. உண்மையான இன்பத்தை அடைவது எங்ஙனம், வாழ்க்கையில் வெற்றி பெறுவது எவ்வாறு, எல்லாம் உன் கையிலேதான் இருக்கின்றன" என்று திடநம்பிக்கையோடு கூறுகிறார் நூலாசிரியர். அதற்கான காரணங்களையும், வெற்றி பெறுதற்கான வழி வகைகளையும், வெற்றி பெற்ற பல பெரியோர்களின் வாழ்க்கைத் துணுக்குகளையும் கொண்ட இப்புத்தகம் தமிழகத்தின் உடனடித் தேவைகளில் ஒன்று.

## அகிலமேற் சமதர்மம் அமைப்பது சுகமா?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அறியாத என்னை இவ்வளவு அன்புடன் ஆதரிக்கக்காரணம் என்ன?

என்ன இது தெரியவில்லையா? அவள் ஒரு பெண்! அதிலும் இளம் பெண். வாழ்நாளெல்லாம் ஒருவருக்குத் தொண்டு செய்வதிலேயே இன்பம் காணும் இனம். முதலில் கணவன் என்ற உடலுக்கு, பிறகு தன் வயிற்றில் பிறந்த உயிர்கள் என்னும் உருவங்களுக்கு மாறி மாறி நாளெல்லாம் திணறும் வரை தொண்டு செய்தாலொழிய அவர்கள் திருப்தியடைவதில்லையே!

ஆனால் இங்கலிந்த நாட்டில் மெல்லியலார் என்று பெயரெடுத்த மெலிந்த கூடுகளில் அனேகம், தொண்டு செலுத்த உறு துணையின்றி ஆயிரமாயிரமாக அசோக மரத்தடிகளில் வீழ்ந்து மடிவதைக் காணவில்லையா?

பாலைக் கொண்டுவந்தாள்—பருகினேன். அப்போதுதான் உயிர் வந்தவன்போல் பரக்கப் பரக்க விழித்தேன்—அவளை—ஓவியத்தை—நன்றாக விழிமேல் விழிவைத்து விழுங்கினேன்-கொஞ்சம் கொஞ்சமாக நாணம் அவள் முகத்தில் ஏறுவதைக் கண்டேன்—உஷ்ண மானியில் சூடு பட்டதும் அதில் உள்ள பாதரசம் கொஞ்சம் கொஞ்சமாக மேலேறுகிறதே அதுபோல. வீட்டிலுள்ள எல்லோரும் சினிமாவுக்குப் போயிருந்தார்கள். அவள் போகலாமா? அதுவும் சினிமாவுக்கா? ஆகவே அசோக மரத்துக்குக் காவல்!

அண்ணா, கடிதம் நீண்டு கொண்டேபோகிறது. அண்ணனுக்குத்தன் காதலைப்பற்றி கடிதம் எழுதும் தம்பி எங்காவது உண்டா? இந்தக் காலத்துப் பிள்ளைகளே இப்படித்தான் என்று சலித்துக் கொள்ளாதே!

அதறகுப் பின்னும் அன்றாடம் நான் அவளைப் பார்ப்பதுண்டு. ஆனால் என் வாயைத்திறந்து, என் இதயத்தைப் பிளந்து அதிலுள்ள ஒரு பொன்னான கோட்டையை அவளுக்குக் காண்பிக்கவே முடியவில்லை. எப்போதாவது ஒருமுறை அவள் கடைக்கண்கள் என்னைச் சந்திக்கும். என் கண்களைக்கூட இல்லை, என் மேனியை, நான் நன்றாக இருக்கிறேன் என்பதைக் கண்டு திருப்தி கொண்டவை போலத் திரும்பிவிடும். ஆனால் இந்த உடலுச்குள்ளேயே ஒரு அசோக மரம் தோன்றி பெரிய மரமாக வளர்வதையும் அதனடியில் அதைச் சுற்றிச் சுற்றி என் உயிர் அழுது வருவதையும் அவளுக்கு எப்படி அண்ணா சொல்வேன்! சில சமயங்களில் அவளிடம் பேச முயற்சித்தேன்—சிலமுறை சமிக்ஞை செய்தேன். ஆனால் அப்போதெல்லாம் எனக்கு அவள்மேல் வந்த ஆத்திரம்! "நல்ல பைத்தியம் இது. இந்தக் காலத்துப் பெண்களெல்லாம் எவ்வளவு துணிவோடு இருக்கிறார்கள்—இதற்குள் என்னென்ன செய்திருப்பார்கள்—இவள் இத்துணைப் பயங்கொள்ளியா? இருந்திருந்து ஒரு பேசா மடந்தையைப் பிடித்தேனே—அன்று அவள் வராமல் இருந்திருந்தால் இத்தனை விளைவு உண்டா."


## புதியதோர் உலகு செய்வோம்!

★

திராவிடர் கழக இலட்சியங்களைச் சிறந்த முறையில் விளக்கும் **பெரியார்** அவர்களின் பேருரை. ஒவ்வொரு திராவிடரும் அவசியம் படிக்கவேண்டிய அருமையான சொற்பொழிவு.

**விலை அணா 6.**

**தபாலில் 0—7—0**

★

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு,

சென்னை 1.


சினிமாத் திரையில் தோன்றும் அழகிகளைக் கண்டு ஆவல் கொள்வதைப் போல மறைந்து மறைந்து மறைந்த அந்த நிழலின்மேல் நான் நினைவைச் செலுத்தியிருந்தேன்.

ஆனால் அண்ணா, அவள் உள்ளத்தில் ஒரு பெரிய உலைக்கூடம் உருவாகிக் கொண்டிருந்ததை அப்போது நான் உணர்ந்துகொள்ள முடியவில்லை. அந்த உலையிலே மானம் என்னும் நெருப்பிலே இன்பம் இச்சை காதல் காமம் ஆசை ஆவல் தொண்டு என்னும் இவைகளை அவள் ஒவ்வொரு நாளும் இட்டு, சுட்டு பொசுக்கி வந்ததை நான் அப்புறந்தான் அறிந்தேன்; இருந்தும் அந்தத் தீயிலிருந்து தப்பி அவள் முகத்தில் சுடர்விட்டு நர்த்தனமாடிய 'எழிலை' மட்டும் அவளால் மறைக்கவே முடியவில்லை!

மீண்டும் ஓர் முறை வாய்ப்பு வந்தது.. யாருமில்லாத வீட்டில் பூனை போன்று நான் நுழைந்தேன். அவள் தன்னந்தனியே அடுக்களையில் அமர்ந்திருந்தாள். அவள் அழகைப் பருகிய வண்ணம் மெதுவாக அருகில் சென்று நின்றேன். திடுக்கிட்டு என்னைத் திரும்பிப் பார்த்தாள்! அந்த ஒரு விநாடியில் அவள் கண்களைக் கவனித்தேன். அதில் படிந்திருந்த ஈரம் என் கண்களில் படாமற் போகவில்லை. சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி, என் உள்ளத்தில் அவள் முகத்தைப் புதைத்து வாய்விட்டு அழட்டுமென்று எண்ணி என் நெஞ்சத்தை ஏந்தி அவளுக்குத் தரலாமென்று வந்தேன்.

ஆனால் அவள் சரேலென்று பாய்ந்து அருகில் இருந்த அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

அண்ணா! அவசரத்தில் கைகால் ஓடாது என்பார்கள். ஆனால் இவ்வளவும் ஒரு விநாடியில் நடந்தது என்றால் நீ நம்பமாட்டாய்! உண்மையில் எனக்குத்தான் கைகால்கள் ஓடவில்லை.

கதவுக்கருகில் நின்று வெறித்துப் பார்த்தேன். அறைக்குள்ளிருந்து வந்த விம்மல் ஒவ்வொன்றும் என் உள்ளத்தில் ஆணியை அறைந்தது போன்றுபட்டது எனக்கு. அந்த நிலையிலாவது ஏதாவது பேசிவிட்டு வந்தால்தான் என் மனம் ஆறும் என்று எண்ணினேன். ஆனால் அவள் விம்மல்களுக்கிடையே வந்த அந்தச் சொற்கள்—"தயவுசெய்து

**சூழும் நற்பேதம் தொடர்வது வாழ்வோ?**

உங்கள் அறைக்குப் போய்விடுங்கள்—யாராவது பார்த்தால்......"

நான் பேசாமல் திரும்பினேன். திரும்புமுன் எதிரே ஒரு படம் தெரிந்தது. அதிலே அவள் உருவம். அதை நான் உடனே எடுத்துக் கொண்டேன்.

பசித்திருக்கும் ஒருவன் பாலிருக்கும் என்று தேடிச் செல்ல, அங்கு பாலில்லாமல் வெறும் மோர் இருக்கக் கண்டால் அதை விடுவானா? ஆனால் அதுவும் மோர் இல்லை, வெறும் சுண்ணாம்புத் தண்ணீர் என்று தெரியவந்தால் அவன் நிலை எப்படியிருக்கும்? அந்தப்படத்தை நான் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். ஆனால்—

அந்த வீட்டிலிருந்து ஒரு சிறு பையன் அடிக்கடி என் அறைக்கு வருவான். ஒரு முறை அவன் என் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருக்கும்போது — இந்தப் படம் பொத்தென்று கீழே விழுந்தது— அதைக் கையில் வைத்துக்கொண்டு அவன் என்னைப் பார்த்த பார்வை!

எனக்கு உயிரே நின்றுவிட்டது.

அன்று மாலை நான் அறையிலேயே முடங்கிக் கிடந்தேன். நெருப்பு திடீரென்று பிடிப்பதில்லை. கொஞ்சம் கொஞ்சமாகப் புகைந்துதான் தீ பிடிக்கிறது. அந்த வீட்டில் அப்போதுதான் காரசாரமான பேச்சுக்கள் புகைந்துகொண்டிருந்தன. வரவர அதிகமாகியது—அவள் தந்தை அச்சமயம் ஊரிலில்லை. அவளுடைய சிற்றன்னை—அவள் பேசிய பேச்சுக்கள்—அப்பப்பா! நான் வீட்டைவிட்டு வெளியே கிளம்பினேன். நான் செய்த குற்றத்திற்காக, பாவமறியாத ஒரு அபலைப் பெண் அவதிப்படுவதைத் தடுக்கக்கூட நான் சக்தியற்றுக் கிடந்தேன். அது மட்டுமல்ல அந்தக் குற்றச் சாட்டுகளின் முன்னால் முகங் காட்டி நிற்கக்கூட பலமற்று நான் கோழையைப்போல வெளியேறினேன் — வெளியேறும்போது கேட்ட அந்த பயங்கர சப்தங்கள்! அசோக மரத்தடியில் வாயைத் திறவாது மௌன தேவதையாக வாசம் புரிந்த அந்த சீதையின் மேல் விழுந்த ஒவ்வொரு அடியும் அந்த மரத்திலிருந்து ஒவ்வொரு கிளையும் முறிந்து அவள்மேல் விழுவது போல் பட்டது எனக்கு.

வெளியேறிய நான் எங்கே சென்றேன், என்ன செய்தேன் எனக்கே தெரியவில்லை.

வெகு நேரங்கழித்து நான் திரும்பி வந்தபோது என் அறை பூட்டிக்கிடந்தது.

அந்த வீடு! அதுவும் பூட்டிக் கிடந்தது. நான் திகைத்தேன். சன்னல் வழியே உள்ளே எட்டிப் பார்த்தேன். ஒரே இருட்டு ஆனால் அந்த இருண்ட வீட்டிலிருந்து, விட்டுவிட்டு ஒலித்து வெளிவந்த விம்மல்கள்—அண்ணா என் இருதயம் பிளந்துவிட்டது அண்ணா! என் உயிரை அவ்வீட்டில் விட்டு பூட்டிவிட்டு வெளியேறும் மக்களைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய் அண்ணா!

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழவேண்டுமென்று விரும்பும் இந்த நாட்டில் அன்றாடம் அசோக மரங்களின்மடியிலிருந்து எழும் எண்ணற்ற விம்மல்களைப் போக்க வழியில்லையா?

பொற் கொடிகள் பொங்கிப் பொலிந்து நின்ற இந்தப் "புண்ணிய பூமி"யிலே, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக, ஆலம் விழுதைப் போலப் பெருகிப்பெருகி அங்கங்கே—வீட்டுக்கு வீடு—வேரூன்றி நிற்கும் அசோக மரங்கள் தலை நிமிர்ந்து நின்று அடிக்கடி நம்மைப் பார்த்து நகைப்பதைக் காணமறுக்கின்றார்களே ஏன்?

எதுகை மோனைகளை எடுத்து வந்து, கதைகள் சொல்லி, கவிதை பாடி, காவியம் புனைந்து கடைசியில் கடவுளர் உலகுக்குக் கரம் நீட்டும் 'கை காட்டி'களின் கண்களில் இவை படுவதேயில்லையா?

இவர்கள் அணைத்து வளர்க்கும் அசோகங்களின் காலடியிலேயே, கட்டிப்போட்ட கண்களிலிருந்து காலகாலத்திற்குக் கண்ணீரைப் பாய்ச்சி கரைந்து அழுதுமடியும் கன்னிகளுக்கு விடுதலை வேண்டவே வேண்டாமா?

இவ் விஷவிருட்சங்களை வேரோடு வெட்டி வீழ்த்த விபீஷணத்தனம் கலவாத வீரர்களுமில்லையா?

அண்ணா! கோழையாகியிருந்த என் உள்ளம் குதித்தெழும் வகையில் நடந்த இந்த அநீதியைத் துடைக்க முயன்றேன் என்றால் ஆச்சரியப்படுகிறாயா?

எப்படியாவது வீட்டிற்குள் புக வேண்டுமென்று முயன்றேன். ஆனால் நள்ளிரவில் வீட்டின் முன் நின்று பூட்டை உடைப்பவனைக் கண்டால் மக்கள் என்ன நினைப்பார்கள்: சுற்று முற்றும் பார்த்தேன். கடைசியில் தோட்டம் வழியாக உள்ளே நுழைந்தேன். ஆபத்து வேளையில் அன்பு உதயமாகுமோ என்று கேட்டேனல்லவா? அன்பு மட்டுமல்ல துணிச்சலும் உண்டாகும் போலும்!

ஒரு நொடிப் போதில் அவள் முன்னே நின்றேன்.

அந்த இருட்டில் அந்நிலையில் என்னைக் கண்டால் அவள் வீறிட்டு அலறுவாள் அல்லது பாம்பைப்போல் சீறி விழுவாள்—இல்லையெனில் கோபத்தில் என் மென்னியைப் பிடித்துத் திருகிப் போடுவாள் என்று நினைத்தேன். ஆனால் அவள் சாவதானமாகத் திரும்பிப் பார்த்தபோது நான் என்ன நினைப்பது!

"அன்பே! எங்கிருந்தோ வந்த என்னால்தான் உனக்கு இவ்வளவு இன்னல்—என்னை மன்னித்துவிடு! அந்த ஒரு வார்த்தையை மட்டும் சொல்லிவிடு. நான் இவ்விடத்தைவிட்டு மறைந்தே போய்விடுகிறேன்—இனி உன் வாழ்வில் நான் ஒருபோதும் குறுக்கும் நெடுக்குமாக நடக்கமாட்டேன்! இளம் வயதிலே—சிறு உள்ளத்திலே தோன்றி மறையும் ஒரு கற்பனையைப்போல என்னை மறந்துவிடு.

ஆனால் நான், அணைக்க வந்தபோது அம்பு பட்ட பறவை போல நொண்டி நொண்டிப் பறந்துபோய், எங்காவது கண் காணாத தூரத்தில் நிழலுள்ள மரத்தில் நெருப்புள்ள இடத்தில், என் உடலிலுள்ள இந்த அம்பை அணைத்துக்கொண்டே சிறுகச் சிறுக மடிவேன். நீ சுகமாக வாழ்வதாகத் தெரிந்தால் போதும்—எனக்கு விடை கொடு" என்றேன்!

அவள் எழுந்து வந்தாள்

வந்தவள் என் கையைப்பற்றிக் கொண்டு, என் முகத்தை நோக்கி 'நீங்கள் படித்தவர்கள் என்று

**சுயமரியாதையால் உயர்வது வாழ்வோ?**

எண்ணினேன்—அவ்வளவு படித்தும் இன்னும் பெண்களின் மனோநிலையைச் சரியாக உணரவில்லை நீங்கள்—பெண்களுக்கு வரும் இடரெல்லாம் அவர்களைப்போன்ற மற்றப் பெண்களால்தான் வருகின்றன என்பதை உங்களில் யாரும் உணர்வதேயில்லை. உம்மைப் போன்ற ஆடவர்களால் எரியும் திரியை தூண்டிவிடத்தான் முடியுமே தவிர உங்களால் துன்பம் தர முடியாது. நீங்கள் போய்விட்டால் நான் ஆனந்தமாக இருப்பேன் என்று யார் சொன்னது? நீங்கள் எத்தனை காத தூரம் போயினும், எவ்வளவு ஆண்டுகள் ஆயினும் இந்தச் சம்பவத்தை சுட்டிச் சுட்டிக் காட்டி, நான் நொந்து வெந்து மடியும் வரை, என்னை சுடுசொல்லால் கொல்லாமலிருக்கப் போவதில்லை. நீங்கள் எங்கே வேண்டுமானாலும் போங்கள்—நான்—நான் எங்கே டோக வேண்டுமென்பது எனக்குத் தெரியும்."

அண்ணா! அவள் தான் பேசினாள்! பேசா மடந்தை என்று பெயர் கொடுத்தேனே அதை நினைத்துப் பார்க்கிறாயா? இல்லை அவளேதான் பேசினாள்! உயிருடன் இருப்பதினும் இறப்பது மேல் என்று எண்ணங்கொண்ட அவள் சிந்தனையை அவள் சிதறாத பேச்சு சித்திரம் போட்டுக் காட்டியது. கிணற்றிலோ, கயிற்றிலோ, மருந்திலோ தன் உயிரைப் பணயம் வைக்கிறாள் என்பதை நீ புரிந்து கொள்ளவில்லையா?

பெண்கள் கோழைகளாக இருக்கலாம். அறுபட்ட விரலிலிருந்து விழும் இரத்தத்தைக்கண்டு மயக்கமுறும் அனேக பெண்களை நான் பார்த்திருக்கின்றேன். ஆனால் அசோக மரத்தடியிலேயே வாழும் அணங்குகள் தங்கள் உள்ளங்கள் தினம் தினம் ரம்பங்கொண்டு அறுக்கப் படுவதை உணர்ந்தும், அதிலிருந்து வடியும் இரத்தம் அவர்கள் உடலையே அழுகவைப்பதைத் தெரிந்தும், அஞ்சாமல், கிறிதும் மனம் கலங்காமல், அந்த அவல நிலையைப் பொறுத்துக் கொண்டு வாழ்கிறார்களே, அந்த அஞ்சாமையை என்னென்று கூறுவது.

அண்ணா! அந்த நிலையிலே நடுங்கும் கைகளாலே அவளைப் பற்றினேன். பையப் பைய அவளைப் பயந்து கொண்டே அணைத்தேன். அந்த அணைப்பிலே ஒரு பெரிய அசோக மரத்தை வெட்டி வீழ்த்த முடியும் என்ற தைரியம் எனக்கு எங்கிருந்தோ வந்தது.

வெளியே நிலவு காய்ந்துகொண்டிருந்தது. இலைகள் கூட அசையாது எங்கள் செய்கைகளைச் கவனித்துக் கொண்டிருந்தன. அப்போது அவள் காதோடு காதாக எதையோ சொன்னேன். நான் சொல்லவில்லை — என் இதயம் பேசிற்று. பேசவில்லை பாடிற்று.

அண்ணா, வெள்ளைப் புறாக்களின் சின்னஞ் சிறு சிறகுகளாலான மெத்தையிலே எப்போதாவது படுத்து பறந்திருக்கிறாயா? அல்லது அதோ தெரிகிறதே நிலவு, கிள்ளி எறிந்த நகம் போலத் தோன்றும் தொட்டில், அதிலேஅமர்ந்து மேகங்களினூடே தவழ்ந்து சென்றிருக்கின்றாயா?

அண்ணா உன் மைத்துனியின் பெயரைச் சொல்லவே இல்லையே! பெயர் எதற்கண்ணா! நீ எப்படி வேண்டுமானாலும் அவளை அழைத்துக்கொள்! நான் அவளை 'அசோகி' என்று அழைக்கப் போகிறேன்.

மன்னியிடம் சொல்! 'உன் மைத்துனன் காரியக்காரன் அவனுக்கு ஒரு தங்கமென்ன தங்கப் பதுமையே கிடைத்துவிட்டது. அதை அணைத்துக் கொண்டு அவன் பறக்கிறான்.' என்று சொல். எங்கேயோ எட்டாத தூரத்தில் ஒரு வீடு கட்டுவானாம், அதிலே அவளைச் சுற்றி சுற்றி வருவானாம், அவனுக்குப் பசிக்கவே பசிக்காதாம், அப்படிப் பசிக்கும் போதெல்லாம் அவள் அதரபானம் அளிப்பாளாம், அவனுக்கு மெத்தையே வேண்டியிருக்காதாம் என்று சொல்.

அண்ணா! நாங்கள் வருகிறோம். எங்கே போகிறோமென்பதே தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் தெரியும். அங்கே அசோக மரங்களே இருக்காது! ஆகவே அங்கு சீதைகளுக்கு வேலையே இல்லை! வணக்கம் அண்ணா.

—


## சிறந்த வெளியீடுகள்:

| | ரூ. | அ. |
|---|---|---|
| சித்திரபுத்திரன் (பெரியார்) | 0 | 6 |
| புதியதோர் உலகு (பெரியார்) | 0 | 6 |
| ஈரோட்டுப் பாதை (இளஞ்செழியன்) | 0 | 6 |
| திராவிடஸ்தான் வேண்டாமா | 0 | 8 |
| காரல் மார்க்ஸ் | 1 | 0 |
| எது இசை | 0 | 6 |
| திராவிடர் நாகரிகம் | 0 | 10 |
| தமிழர் யார் | 0 | 8 |
| ஆரியர் தமிழர் கலப்பு | 0 | 8 |
| தமிழ் பழமையும் புதுமையும் | 0 | 8 |
| தேன் கூடு (கவிதை) | 0 | 2 |
| தமிழ் ஆராய்ச்சி | 0 | 6 |
| தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா | 0 | 4 |
| பெண்ணே பெரியவள்—ஏன் | 0 | 8 |
| பெண்கள் உலகம் | 0 | 12 |
| மனிதன் எப்படித் தோன்றினான் | 0 | 8 |
| தமிழரின் மறுமலர்ச்சி | 0 | 8 |
| தமிழர் சமயம் | 0 | 8 |
| ஆரிய வேதங்கள் | 0 | 10 |
| மரணத்தின்பின் | 0 | 8 |
| சிந்துவெளித் தமிழர் | 0 | 8 |
| ஐக்கிய திராவிடம் | 0 | 12 |
| இராவணன் வித்தியாதரனா | 0 | 6 |
| இந்தியாவில் சோஷலிசம் | 0 | 12 |
| இந்துமதம் தமிழர் மதமா | 0 | 8 |
| தமிழர் சமயம் எது | 0 | 8 |
| கவிஞர் விழா | 0 | 6 |
| புரட்சிப் பெண் | 0 | 8 |
| திராவிட மொழிகளும் இந்தியும் | 0 | 6 |

தபால் செலவு தனித்தனி 0 1 0

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு, சென்னை 1.


**Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)**